இணைப்பு-I

(517-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக்கோரிக்கை எண் 13

நீதி நிருவாகம்

சட்டக் கல்வி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு: 1995-96

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு மேன்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

சென்னை சட்டக் கல்லூரியானது 1891 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் திருச்சியிலும், கோவையிலும் முறையே ஒவ்வொரு சட்டக் கல்லூரி துவக்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் நான்கு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

சட்டப் படிப்பின் கால அளவு 1967-68 ஆம் கல்வியாண்டு வரை இரண்டு ஆண்டுகளாக இருந்தது. இந்த முறையின்படி மாணவர்கள் மூத்த வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெறுதல் வேண்டும். இந்திய வழக்கறிஞர் மன்றத்தால் நடத்தப்படும் “நடைமுறை சட்டம்” தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும் என விதி முறைகள் இருந்தன. பின்பு சட்டப் படிப்பின் கால அளவு இரண்டாண்டுகளிலிருந்து மூன்றாண்டுகளாக உயர்த்தப்பட்டு, பழைய முறை கைவிடப்பட்டது.

பணியிலிருப்போருக்காக 1966-67 ஆம் கல்வியாண்டிலிருந்து சென்னை டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியிலும், 1977-78 ஆம் கல்வியாண்டிலிருந்து மதுரை சட்டக் கல்லூரியிலும், மாலை நேர சட்டப் படிப்பு தொடங்கப்பட்டது. பின்னர் இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அறிவுரைப்படி 1979-80 ஆம் ஆண்டுடன் மாலை நேர சட்டப்படிப்பு நிறுத்தப்பட்டது. பின்னர் இந்திய வழக்கறிஞர் மன்றத்தின் அனுமதியை பெற்று 1983-84 ஆம் கல்வியாண்டு முதல் நான்கு அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாலை நேர சட்டப்படிப்பு மீண்டும் தொடங்கப்பட்டு செம்மையாக நடைபெற்று வருகிறது.

சட்டக் கல்வியின் தரத்தினை மேலும் உயர்த்தும் பொருட்டு, இந்திய வழக்கறிஞர் மன்றத்தால் 1983-84 ஆம் ஆண்டுமுதல் புதிதாக 5 ஆண்டு

சட்டப்படிப்பு அறிமுகப் படுத்தப்பட்டது. அதன்படி சட்டப்படிப்புக்கு கால அளவு 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டு, பிளஸ் 2 தேறிய மாணவர்கள் சேருவதற்கு அனுமதிக்கப் படுகின்றனர்.

பல்வேறு சட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பதாரர்களை தேர்வுசெய்யும்முறை 1985-86 ஆம் கல்வியாண்டிலிருந்து மாறுதல் செய்யப்பட்டது. இம்முறையின் கீழ், விண்ணப்பதாரர்கள் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களையும் இத்துறையால் நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களையும் சேர்த்து கணக்கிட்டு தேர்வு செய்யப்பட்டார்கள். 1987-88 ஆம் கல்வியாண்டிலிருந்து இம்முறை மாற்றப்பட்டு விண்ணப்பதாரர்கள் சட்டக் கல்வித் துறையால் நடத்தப்படுகின்ற நுழைவுத் தேர்வில் பெறுகின்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுகிறார்கள். நுழைவுத் தேர்வு விடைத்தாட்களை மதிப்பீடு செய்யும் பணியும் தேர்வுப் பட்டியல் தயாரிக்கும் பணியும் கணிப்பொறி மயமாக்கப்பட்டு இப்பணி அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய மாற்றங்கள் தகுதி வாய்ந்த மாணவர்களை தேர்வு செய்வதற்கும் சட்டக் கல்வித் தரத்தினை உயர்த்திடும் நோக்கத்துடன் செய்யப்பட்டன. இம்மாற்றங்கள் எதிர்பார்த்த பலன் அளித்துள்ளது.

முழுநேர பட்ட மேற்படிப்பு சென்னை, டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியில் 1968-69 ஆம் கல்வியாண்டு முதல் துவக்கப்பட்டது. மதுரை சட்டக் கல்லூரி மற்றும் திருச்சி சட்டக் கல்லூரியில், சட்டத்தில் பட்ட மேற்படிப்பு (முதுநிலை பட்டப் படிப்பு) முறையே 1980-81 மற்றும் 1991-92 கல்வியாண்டுகளில் துவக்கப்பட்டது.

நான்கு சட்டக் கல்லூரிகளிலும் மூன்றாண்டு (முழுநேரம்) மூன்றாண்டு (மாலை நேரம்) மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. சென்னை, டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியில் முதுநிலை சட்டப் படிப்பின் கீழ்வரும் நான்கு பாடப் பிரிவுகளுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. (1) குற்றவியல் மற்றும் தீங்கியல், (2) ஒப்பந்தச் சட்டம், (3) சொத்துரிமை சட்டம், (4) நிர்வாகச் சட்டம் மற்றும் தொழிலாளர் சட்டம். மதுரை சட்டக் கல்லூரியில் "சொத்துரிமை சட்டம்" என்னும் பிரிவிலும், திருச்சி சட்டக் கல்லூரியில் "நிர்வாகச் சட்டம் மற்றும் தொழிலாளர் சட்டம்" என்னும் பிரிவிலும் முதுநிலை சட்ட படிப்பிற்கு முழுநேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு சட்டப் படிப்புகளுக்கு சேர்க்கை கோரி விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகிறது. கீழே தரப்பட்டுள்ள விவரங்கள் இதனை நிரூபிப்பதாக உள்ளது.

ஆண்டு. (1)	விற்பனை செய்யப் பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. (2)	பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. (3)
1991-92	16,400	11,973
1992-93	19,000	13,889
1993-94	23,000	18,209
1994-95	22,092	17,429

சட்டப் படிப்பிற்கு அதிகரித்து வரும் தேவையினைக் கருத்தில் கொண்டு, 1993-94ம் கல்வியாண்டில் பல்வேறு சட்டப் படிப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களை அதிகரித்து அரசு ஆணை பிறப்பித்தது. 1993-94ம் ஆண்டில் இடங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர், ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு இருந்தது:—

சட்டப் படிப்பின் பெயர். (1)	1992-93ம் ஆண்டு வரையில் ஒப்பளிக்கப் பட்ட இடங்கள். (2)	1993-94ம் ஆண்டு அதிகரிக்கப் பட்ட இடங்களின் எண்ணிக்கை. (3)	1993-94ம் கல்வி ஆண்டில் இடங்கள் அதிகரிக்கப் பட்ட பின்னர் ஒப்பளிக்கப் பட்ட இடங்களின் எண்ணிக்கை. (4)
1. மூன்றாண்டு (முழுநேரம்) சட்டப் படிப்பு	590	30	620
2. மூன்றாண்டு (மாலை நேரம்) சட்டப் படிப்பு	480	130	610
3. ஐந்தாண்டு சட்டப்படிப்பு	490	20	510

நடப்புக் கல்வியாண்டில் *(1994-95)* பல்வேறு சட்டப் படிப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களை கீழ்க்கண்டவாறு மீண்டும் அதிகரித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இடங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர், ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை இக்கல்வியாண்டில் கீழ்க்கண்டவாறு உள்ளது:–

	சட்டப் படிப்பின் பெயர்.	நடப்புக் கல்வியாண்டில் (1994-95) அதிகரிக்கப்பட்ட இடங்கள்.	இடங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.
	(1)	(2)	(3)
1.	மூன்றாண்டு (முழு நேரம்) சட்டப் படிப்பு	60	680
2.	மூன்றாண்டு (மாலை நேரம்) சட்டப் படிப்பு	10	620
3.	ஐந்தாண்டு சட்டப்படிப்பு	80	590

நடப்புக் கல்வியாண்டில் *(1994-95)* சட்டக் கல்லூரிகளில் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது:-

	சட்டக் கல்லூரியின் பெயர்.	மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.
	(1)	(2)
1.	டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை-104 (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	2,850
2.	மதுரை சட்டக் கல்லூரி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,660
3.	திருச்சி சட்டக் கல்லூரி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	950
4.	கோவை சட்டக் கல்லூரி (இளநிலை சட்டப் படிப்பு)	890
	மொத்தம்	**6,350**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 25]

மேற்குறிப்பிட்டவாறு அரசால் இடங்கள் அதிகரிக்கப்பட்டதினால் பல மாணவர்கள் பல்வேறு சட்டப் படிப்புகளில் சேருவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி இலக்கியம், பேச்சுப்போட்டி, மூட்கோர்ட் போன்ற இதர செயல்பாடுகளிலும் தனித்தன்மையுடன் சிறப்புற்று விளங்கி வருகின்றனர். மூட்கோர்ட் போட்டிகளில் மாணவர்களின் செயலாக்கம் குறிப்பிடத்தக்கது. டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியின் சார்பாக கலந்துகொண்ட மாணவர்கள், இந்தியாவின் சார்பில் சர்வதேச மூட்கோர்ட் போட்டியில் கலந்து கொள்வதற்கு அடுத்தடுத்து பல ஆண்டுகளாக தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

இவ்வாண்டு, பிலிப் சி ஜேசுப் சர்வதேச சட்ட வாதத்திறனறி (மூட்கோர்ட்) போட்டி, 1995 (இந்திய தேசிய சுற்று) சென்னையில் நடைப்பெற்றது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, இவ்வாண்டும் சென்னை, டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியின் சார்பில் போட்டியில் கலந்து கொண்ட அணி அமெரிக்காவில் பிலடெல்பியாவில் பிலிப் சி ஜேசுப் சர்வதேச மூட் கோர்ட் போட்டி 1995-ல் இந்தியாவின் சார்பில் கலந்துகொள்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. அணி உறுப்பினர்கள் திருவாளர்கள் இராம்நாத் நாராயணன் மற்றும் ஸ்ரீநாத் ஸ்ரீதேவன் சர்வதேச மூட்கோர்ட் போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்வார்கள். சர்வதேச மூட்கோர்ட் போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்ட மாணவர்களின் பெயர்கள் மற்றும் அரசு வழங்கிய நிதி உதவி, அவர்கள் கலந்துகொண்ட ஆண்டு ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு.	போட்டி நடைபெற்ற இடம்.	மாணவர்களின் பெயர் மற்றும் கல்லூரியின் பெயர்.	அரசால் வழங்கப் பட்ட நிதி உதவி ரூபாய்.
(1)	(2)	(3)	(4)
1983-84	வாஷிங்டன் (அமெரிக்கா)	திரு. பி.எஸ். ராமன், திரு. முரளிதரன், டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	-
1986-87	பாஸ்டன், (அமெரிக்கா)	திரு. சிராஜ்சேட், செல்வி நீலா ராமனாதன் டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	*25,000*
1987-88	பாஸ்டன் (அமெரிக்கா)	திரு. சிராஜ்சேட், செல்வி நீலா ராமனாதன், டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை	*50,000*
1989-90	ஆக்லேண்ட் (நியூசிலாந்து)	திரு. செந்தில்குமார், இராமமூர்த்தி, டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	*20,000*
1990-91	வாஷிங்டன் (அமெரிக்கா)	திரு. எஸ். குரு கிருஷ்ணகுமார், திரு. என். பிரபு, டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	*75,000*
1991-92	வாஷிங்டன் (அமெரிக்கா)	திரு. வி. ஆத்மராம், திரு. பி.கே. ஆனந்தராகவன், டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	*96,540*
1992-93	வாஷிங்டன் (அமெரிக்கா)	செல்வி. ஜி. சிரிஷா, திரு. வி. ஆத்மராம், டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	*1,15,540*
1993-94	வாஷிங்டன் (அமெரிக்கா)	திரு. சி. கணேஷ், திரு. டி.எம். குமார், டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.	*1,27,510*

1995 ஏப்ரல் 25]

மாணவர்களின் தகுதியை கருத்தில் கொண்டு மூட்கோர்ட் போட்டியில் கலந்துகொள்வதற்காக தமிழக அரசு மேலே குறிப்பிட்டுள்ளவாறு மாணவர்களுக்கு நிதி உதவியினை வழங்கி உள்ளது.

மாநிலத்தில் அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்னும் அரசின் கொள்கைக்கேற்ப, 1973-74 முதல் தமிழ் மொழியிலும் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ சட்டம் பயில மாணவர்களுக்கு வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. தமிழில் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஓராண்டிற்கு ரூபாய் 180 ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

மாணவர்களின் நலனுக்காக சென்னை, மதுரை மற்றும் திருச்சி சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கி திட்டம் உள்ளது.

சட்ட ஆலோசனை தேவைப்படும் ஏழை மற்றும் எளியோர்கள் பயன்பெறும் நோக்கத்துடன் சட்டக் கல்லூரிகளில் இலவச சட்ட உதவி மையம் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

கட்டிடங்கள்

சென்னை, டாக்டர் அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரி உயர்நீதி மன்ற வளாகத்தினுள் அமைந்துள்ளது. மாணவர்களுக்கென்று ஒரு விடுதியும், மாணவிகளுக்கென்று ஒரு தனி விடுதியும் மொத்தம் இரண்டு விடுதிகள் உள்ளன. இவ்விடுதிகளில் முறையே 225 மாணவர்களும், 60 மாணவிகளும் தங்கிட வசதி செய்யப்பட்டுள்ளன. இவ்விடுதிகள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

மதுரை சட்டக் கல்லூரி, மதுரையில் தல்லாகுளம் பகுதியில் அரசு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. 30 மாணவர்கள் தங்குவதற்கு வசதியாக அரசு கட்டிடத்தில் ஒரு விடுதி செயல்பட்டு வருகிறது. மேலும் 20 மாணவிகள் தங்குவதற்கு வசதியாக அரசுக் கட்டிடத்தில் ஒரு விடுதி செயல்பட்டு வருகிறது.

கோவை சட்டக் கல்லூரி 1979-80 ஆம் கல்வியாண்டில் ரேஸ்கோர்ஸ் பகுதியில் வாடகை கட்டிடத்தில் துவக்கப்பட்டது.

பாரதியார் பல்கலைக் கழக வளாகத்தினுள் மருதமலை பகுதியில் கட்டப்பட்ட சொந்தக் கட்டிடத்திற்கு 21-1-1992 அன்று கல்லூரி மாற்றப்பட்டது. மாணவர்கள் தங்குவதற்கென 7-11-94 முதல் விடுதி செயல்பட்டு வருகிறது. கல்லூரி வளாகத்தினுள் அமைந்துள்ள இவ்விடுதியில் 40 மாணவர்கள் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

[1995 ஏப்ரல் 25

திருச்சி சட்டக் கல்லூரி 1979-80 ஆம் கல்வியாண்டில் துவக்கப்பட்டு திருச்சியில் கீழ் சிந்தாமணி பகுதியில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. தற்போது திருச்சி சட்டக் கல்லூரி வாடகைக் கட்டிடத்திலிருந்து மாற்றப்பட்டு, பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தினுள் ரூபாய் 1 கோடியே 27 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சொந்தக் கட்டிடத்தில் 10-2-95 முதல் செயல்பட்டு வருகிறது.

சட்டப் பல்கலைக்கழகம்

சட்டக் கல்விக்கென தனிப் பல்கலைக் கழகம் அமைக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. மேலும், சட்டப் பல்கலைக் கழகம் அமைத்திட ஒரு தனி அலுவலரை அரசு நியமித்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS